**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் புதன்கிழமை**
**I.A.No.04/2025 In O.S.No.13/2021**

முருகேசன் ... மனுதாரர்/பிரதிவாதி

**//எதிராக//**

1. முருகேஷ்
2. அங்கம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 09.01.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது மேலப்பகுதி கிராம ஊராட்சி செயலாளருக்கு சாட்சிய அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1,2–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் பிரதிவாதி. இவ்வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி அரசால் வழங்கப்பட்ட ஒப்படைவு நமூனா படி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அந்த வீட்டிற்கு மேலபகுதி கிராம பஞ்சாயத்தில் வரி செலுத்தி வருகிறார். மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் அவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்.

2) வாதி தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார் என்பதை நிரூபணம் செய்ய மேலப்பகுதி கிராம பஞ்சாயத்து செயலாளரை அழைத்து கதவு எண்.8/49க்குரிய வரி விதிப்பு பதிவேடுகளையும், இரசீது நகல்களையும் சமூகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளிக்க அவரை விசாரணை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

எனவே மேற்படி நபருக்கு சாட்சி சம்மன் அனுப்ப அனுமதி அளிக்கக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

3) மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்களை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். வாதி அரசு கொடுத்த இடத்தில் வீடு கட்டி வரி செலுத்தி வருவது உண்மையாகும். மேற்படி வாதியின் குடியிருப்பை நிரூபணம் செய்ய பஞ்சாயத்து செயலாளரை அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. இம்மனுவை பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்வதற்கு முன்பே 3ம் தரப்பினரை சாட்சியாக விசாரிக்க கோருவது அனுமதிக்கத்தக்கதல்ல.

4) மனுதாரர் இம்மனுவில் கேட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் அரசின் பொது ஆவணங்கள் ஆகும். அதனை உரிய முறையில் மனு செய்து நகல் பெற முடியும். அவ்வாறு இருக்க இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

5) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

6) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் வாதியின் சுவாதீனத்தை நிரூபிக்க வாதி குடியிருக்கும் பகுதியில் பஞ்சாயத்து செயலாளரை விசாரிக்க வேண்டுமென கோரியுள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ள இவ்வழக்கில் வாதியின் சுவாதீனத்தை நிரூபிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

*********************************
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
குளித்தலை

I.A.No. 04/2025
in
O.S.No. 13/2021

DRAFT / FAIR ORDER

D.D.21.01.2026
*********************************